10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் (பொது-பாசனம்) திரு எஸ். பி. நமச்சிவாயத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினராக நியமிப்பது குறித்து வீட்டுவசதி-நகர்வளர்ச்சித் துறையின் 1.6.1981 ஆம் தேதியிட்ப் பெற்ற 366 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1981 72 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

86. திருப்புவனம் உள்ளூர்ப் பகுதியில் உள்ளூர் திட்டப் பகுதியாகச் சில பகுதிகளைக் குறிப்பிடுவது குறித்து, வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 14.9.1979 ஆம் தேதியிடப் பெற்ற 1801 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

87. முன்னாள் கல்வி-பொது சுகாதாரத் துறையின் 22.4.1949 ஆம் தேதியிடப் பெற்ற 311/1949 ஆம் எண் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட, சென்னை மயிலாப்பூர் மேற்குப் பிரிவுப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 12-9-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1794 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

88. முன்னாள் கல்வி-பொது சுகாதாரத் துறையின் 17.11.1939 ஆம்தேதியிடப் பெற்ற 913/39 ஆம் எண் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட சென்னை, மயிலாப்பூர் கிழக்குப் பிரிவுப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து, வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 12.9.1979 ஆம் தேதியிடப்பெற்ற 1795 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

89. 1975-76 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]